## நகர்மன்ற தலைவர் நிறைவேற்ற கோரும் தீர்மானம்

**1.** நாகர்கோவில் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் மாண்புமிகு தமிழக முதல்வர் சட்டமன்ற தேர்தலுக்கு முன் வருகை தருகையில் நாகர்கோவில் நகராட்சியை மாநகராட்சியாக மாற்றப்படும் என்றும், நாகர்கோவில் நகராட்சியில் பாதாள சாக்கடை சட்டம் நிறைவேற்றப்படும் எனவும் வாக்குறுதி வழஙகப்பட்டிருந்தது. மேற்படி நாகர்கோவில் நகராட்சி மீது சிறப்பு கவனம் செலுத்திய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்ற அவையினை கேட்டுக்கொள்வதுடன் நாகர்கோவில் நகராட்சி மாநகராட்சியாக மாற்றப்படும் போதும், நாகர்கோவில் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் நிறைவேற்றப்படும் போதும் தண்ணீரின் தேவை பெருமளவு அதிகரிக்கும். ஆனால் தற்போதுள்ள நீராதாரத்தின் படி பொதுமக்களுக்கு அரசு நிர்ணயித்த அளவின் படியான நீர் வழஙகிட எவ்வித சாத்திய கூறும் இல்லை. எனவே கூடுதல் நீராதாரத்தை உருவாக்கப்படவேண்டியது தவிர்க்க இயலாததாகிறது. எனவே தற்போதுள்ள எல்லை விரிவாக்கம் மற்றும் நகரின் வளர்ச்சி மற்றும் பெருகி வரும் மக்கள் தொகையினை கருத்தில் கொண்டு கூடுதல் நீராதாரம் உருவாக்கிட உடனடி நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்பதாலும் அரசின் அனுமதி கிடைக்கப் பெறும் நிலையிலும் பணிமுடிக்கப்பட்டு திட்டம் செயலாக்கத்திற்கு வர நீண்டகால அவகாசம் தேவைப்படும் என்பதாலும் உடனடியாக தக்க விரைவு நடவடிக்கை எடுக்கப்படவேண்டியதும் தவிர்க்க இயலாததாகிறது. எனவே மிக வேகமாக வளர்ந்து வரும் இந்நகரின் பொதுமக்கள் நலன் கருதி உலக்கை அருவி திட்டத்திலிருந்தும்,, குழித்துறை ஆறு திட்டத்திலிருந்தும் தண்ணீர் வினியோகிக்கும் திட்டத்தினை குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நிறைவேற்றி தர மாண்புமிகு தமிழக முதல்வரை கேட்டுக்கொள்ளலாம்.

**தீர்மான எண் : 01 – அனுமதிக்கப்பட்டது.**

# பொருள்கள்

1 நாகர்கோவில் நகராட்சி பகுதியில் ஐந்தாவது இந்திய மக்கள் தொகை திட்டத்தில் அனுமதித்த மூன்று நகரநல்வாழ்வு மையமும், ஒரு மகப்பேறு மையமும் செயல்பட்டு வருகிறது. கூடவே வடசேரியில் நகராட்சி மருந்தகம் ஒன்றும் செயல்பட்டு வருகிறது. மேற்கூறிய அனைத்திலுமே சிறு நோய்க்கான புற நோயாளிகள் பிரிவு, தடுப்பூசி , தாய் சேய் நலம் பிரசவகால முன் கவனிப்பு, பின் கவனிப்பு மருத்துவ முகாம்கள் போன்ற சேவைகள் செய்யப்பட்டு வருகிறது. மூன்று நகர நல் வாழ்வு மையஙகளில் ஒன்றான வட்டவிளையில் மகப்பேறு மையமும் இணைந்துள்ளது. இந்த மகப்பேறு மையத்தில் கர்ப்பிணிப்பெண்கள் பரிசோதிப்பதற்கான பரிசோதனை மையஙகள் இல்லை. மற்ற இரண்டு நகர நல்வாழ்வு மையஙகளிலும் பிரசவத்திற்கான வசதிகளும் இல்லை. பிரசவத்திற்காக மக்கள் அதிக தொலைவில் இருக்கும் ஆசாரிபள்ளம் அரசு மருத்துவக்கல்லூாி மருத்துவமனைக்கு அல்லது அதைவிடவும் அதிக தொலைவில் உள்ள ஆரம்ப சுகாதார மையஙகளுக்கு செல்லவேண்டும். மேலும் டாக்டர் .முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித்தொகை கிடைக்க பயனாளிகள் அரசு மருத்துவமனையில் பிரசவம் பார்க்க வேண்டும். எனவே நகர மக்களின் வசதியை கருத்தில் கொண்டு கிருஷ்ணன்கோவில், வடிவீஸ்வரம் போன்ற நகர நல்வாழ்வு மையஙகளையும் வடசேரி மருந்தகத்தையும் தரம் உயர்த்தி சுகாதார நிலையஙகளாகவும் வட்டவிளையில் நகர நல் வாழ்வு மையத்தோடு இணைத்து மகப்பேறு மையத்தை 30 படுக்கை வசதிகள் கொண்ட தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார மையத்திற்கு இணையாக தரம் உயர்த்தவும் தமிழக அரசை கேட்டு தீர்மானிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள நகர்மன்ற தலைவரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே மேற்படி நகர நல்வாழ்வு மையம் மற்றும் மருந்தகத்தை தரம் உயர்த்தவும், மகப்பேறு மையத்தை ஆரம்ப சுகாதார மையத்திற்கு இணையாக தரம் உயர்த்தவும் அரசை கேட்டுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.8366/20011/எச்.4

**தீர்மான எண் : 02 – அனுமதிக்கப்பட்டது.**

2. இந்நகராட்சிக்கு சொந்தமான வடசேரி காய்கறி சந்தை, வடசேரி மீன்சந்தை மற்றும் சரலூர் அனாதை மடம் அருகில் உள்ள மீன்சந்தை ஆகியவற்றை நவீன முறையில் மேம்பாடு செய்திட அரசு மானியத்துடன் அனுமதி பெறும் பொருட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி அனுமதியினை விரைவாக பெற்று செயல்படுத்திட ஏதுவாக தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டு கண்காணிப்பு செய்திட இந்நகராட்சி நகரமைப்பு அலுவலரை தொடர்பு அலுவலராக ( Laison Officer) நியமிக்கலாம். மன்ற ஒப்புதலுக்கு

<u>அலுவலக குறிப்பு</u> – அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 03 – அனுமதிக்கப்பட்டது.**

3. இந்நகராட்சிக்குட்பட்ட மார்த்தால் அருகில் உள்ள நீரேற்று நிலையத்தில் 30 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்ட 85 H.P. மோட்டார் பம்பை அப்புறப்படுத்திவிட்டு அதே அறையில் கூடுதல் செயல்திறன் உடையதும் குறைவான மின்சாரம் பயன்பாடும் கொண்டதுமான மோட்டார் பம்புகள் இரண்டு எண்ணம் பொருத்த உத்தேச செலவு ரூ.20,00,000/– ஆகும் மேற்படி செலவினத்திற்கு நகர்மன்ற அனுமதிக்கு.

<u>அலுவலக குறிப்பு</u> – அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.21172/2011/இ2

**தீர்மான எண் : 04 – அனுமதிக்கப்பட்டது.**

4. .இந்நகராட்சிக்குட்பட்ட மார்த்தால் நீரேற்று நிலையத்தில் உள்ள முப்பது ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்ட 85 H.P. மோட்டாரை அப்புறப்படுத்திவிட்டு கூடுதல் செயல்திறன் உடைய புதிய மோட்டார்கள் இரண்டு எண்ணம் வாஙகுவதற்கும் மற்றும் பம்ப் செய்யும் தண்ணீர் பல இடஙகளில் லீக் ஆவதால் 350 mm விட்டமுள்ள சி.ஐ.பைப்புகள் அனைத்தையும் ஒரு மீட்டர் ஆழத்தில் பூமிக்கு அடியில் பதிக்கவும் 600 mm BP டேஙகையும் 800 mm BP டேஙகையும் இணைக்கும் இணைப்பு வால்வு அமைக்கவும் உத்தேச செலவு ரூ.8,50,000/– ஆகும். எனவே மேற்படி செலவினத்துக்கு நகர்மன்ற அனுமதிக்கு

<u>அலுவலக குறிப்பு</u> – அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.21172/2011/இ2

**தீர்மான எண் : 05 – அனுமதிக்கப்பட்டது.**

5. இந்நகராட்சிக்குட்பட்ட முக்கடல் அணையில் அமைக்கப்பட்டுள்ள 120 H.P. டர்பைன் பம்ப் மோட்டார் மற்றும் 60 H.P. மோட்டார்கள் மூலம் முக்கடல் அணைக்கு அனந்தனார் கால்வாயில் இருந்து இறைத்து குடிநீர் வினியோகப்பணி மேற்கொள்ளவும் மேற்படி மோட்டார்களை இயக்க 380 KVA திறன் உடைய டீசல் ஜெனரேட்டர் ஒன்று புதியதாக வாஙகிப் பொருத்த உத்தேச செலவு ரூ.38,00,000/– ( முப்பத்தி எட்டு லட்சம் ) ஆகும். மேற்படி செலவினத்துக்கு நகர்மன்ற அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.21172/2011/இ2

**தீர்மான எண் : 06 – அனுமதிக்கப்பட்டது.**

6. இந்நகராட்சிக்குட்பட்ட மார்த்தால் நீரேற்று நிலையத்தில் உள்ள மோட்டார் மின்சாரம் தடைபடும் போது இயக்க முடியாத வண்ணம் உள்ளதால் மேற்படி நீரேற்று நிலையத்திற்கு 200 KVA டீசல் ஜெனரேட்டர் ஒன்ற புதியதாக வாஙகிப்பொருத்த உத்தேச செலவு ரூ.19,50,000/– ஆகும். மேற்படி செலவினத்திற்கு நகர்மன்ற அனுமதிக்கு

<u>அலுவலக குறிப்பு –</u> அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.21172/2011/இ2

**தீர்மான எண் : 07 – அனுமதிக்கப்பட்டது.**

7. நாகர்கோவில் நகராட்சிக்கு சொந்தமான கலைவாணர் கலையரங்கம் நகரின் மையப்பகுதியில் இடம் பெற்றிருந்தும், மேற்படி கலையரங்கத்தால் நகராட்சிக்கு மிகக்குறைவான வருவாய்தான் ஈட்டப்படுகிறது. மேலும் மேற்படி இடம் அதிக பரப்பளவு கொண்டுள்ளதால் மேற்படி இடத்தில் விசாலமான வாகன நிறுத்த வசதியுடன் நவீன வணிக வளாகம் கட்டப்பெறும் நிலையில் நகராட்சிக்கு பெருமளவு வருவாய் ஈட்ட இயலும். மேலும் மேற்படி புதிதாக கட்டப்படவுள்ள வணிக வளாகத்திற்கு கலைவாணர் பெயரை சூட்டுவதுடன், மேற்படி வணிக வளாகத்தினை முன் ஏல நடவடிக்கைக்கும் உட்படுத்தலாம். எனவே நகர்மன்றத்தலைவரால் அறிவுறுத்தப்பட்டபடி, மேற்படி இடத்தில் விசாலமான வாகன நிறுத்த வசதியுடன் நவீன கலைவாணர் வணிக வளாகம் கட்ட நடவடிக்கை எடுக்கவும், மேற்படி வணிக வளாகம் அமைக்க மதிப்பீடு தயார் செய்தல் மற்றும் வடிவமைப்பு பணிக்கு ஒப்பந்தப்புள்ளிக்கோரி தனியார் நிறுவனத்தினை ஈடுபடுத்திடவும், அதற்காகும் செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – நகரின் வளர்ச்சி, பொதுமக்கள் நலன் மற்றும் நகராட்சியின் வருவாய் ஆகியவற்றை கருத்தில் கொண்டு அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 08 – அனுமதிக்கப்பட்டது.**

8. நாகர்கோவில் நகராட்சிக்கு சொந்தமான சரலூர் பகுதியில் அமைந்துள்ள மாட்டுச்சந்தை பகுதியில் நவீன வணிக வளாகம் அமைக்க நகர்மன்றத்தலைவர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளதால் , மேற்படி இடத்தில் நவீன வணிக வளாகம் அமைக்க மதிப்பீடு தயார் செய்தல் மற்றும் வடிவமைப்பு பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று தகுதியான நிறுவனம் மூலம் செயலாக்கிடவும், மேற்படி வணிக வளாகத்தில் உள்ள கடைகளை முன் ஏல நடவடிக்கைக்குட்படுத்தவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – 1. அனுமதிக்கலாம்,.

2. மேற்படி பணிக்கு உரிய திட்ட அனுமதி பெற நகரமைப்பு அலுவலர் அவர்களை ( Laison Officer ) தொடர்பு அலுவலராக நியமிக்கவும் மன்றம் அனுமதி வழஙகலாம்.

**தீர்மான எண் : 09 – அனுமதிக்கப்பட்டது.**